விநாயகர் பதின்ம மேல்நிலைப்பள்ளி, சிவகாசி

வகுப்பு : 12 பாடம் : தமிழ்

DATE: 20 – September – 2021 T – 40 No. of Pages : 06

# திருக்குறள்

**முன்னுரை** :

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திரு + குறள் - மேன்மையான குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல் ஆதலின் இப்பெயர் பெற்றது. குறள் - இரண்டடி வெண்பா திரு - அடைமொழி . திருக்குறள் என்பது பாட்டை உணர்த்தாது நூலை உணர்த்துவதால் அடையடுத்த கருவியாகு பெயர்.

**நூற்குறிப்பு** :

இந்நூல் அறத்துப்பால் ,பொருட்பால் ,காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளையும் ,133 அதிகாரங்களைக் கொண்டது. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களாய் 1330 பாடல்களைக் கொண்டது. அறத்துப்பாலில் நான்கு இயல்களும் பொருட்பாலில் மூன்று இயல்களும், காமத்துப்பாலில் இரண்டு இயல்களும் ஆக மொத்தம் 9 இயல்கள் உள்ளன. அவை

அறத்துப்பால் : பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்

பொருட்பால் : அரசு இயல், அமைச்சு இயல், ஒழிபியல்

காமத்துப்பால் : களவியல் ,கற்பியல்

இந்நூலுக்குப் பத்துப் பெரும் புலவர்கள் உரை எழுதியுள்ளனர். அவற்றுள் சிறந்தது பரிமேலழகர் உரை ஆகும். ஏனைய உரையாசிரியர்கள் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப் பெருமாள், காளிங்கர் என்பவராவர் .

**நூலின் சிறப்பு** :

இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. மனித நாகரிகம் பிறநாடுகளில் தோன்றும் முன்னரே மனிதவாழ்வின் மேன்மைகளையும், வாழ்வியல் நெறிகளையும் வகுத்துக் காட்டிய நூல். ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் முதலிய உலக மொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி, பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில் என்னும்

பழமொழிகள் இந்நூலின் பெருமையை விளக்குகின்றன. இவற்றுள் 'நால்' என்பது, நாலடியாரையும் 'இரண்டு' என்பது திருக்குறளையும் குறிக்கும்.

**ஆசிரியர் குறிப்பு** :

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருவள்ளுவர் | பெற்றோர் | : ஆதி ,பகவன் |
| ஊர் | : மயிலாப்பூர் | காலம் | : இரண்டாம் நூற்றாண்டு |

இவர் கி.மு 31 இல் தோன்றியவர் என்று அறிஞர் சிலர் கூறுவர் .

**திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள்** :

நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகன், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர், பொய்யில் புலவர் என்பனவாகும்.

**அறிவுடைமை**

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கள் ஆகா அரண்

**விளக்கம்** :

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அன்றியும் பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணும் அதுவே ஆகும்.

சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

**விளக்கம்** :

மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல், தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செல்லுவதே அறிவாகும் .

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

**விளக்கம்** : எப்பொருளை யார்யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

எல்லது உறைவது உலகம் உலகத்தோடு

அல்லது உறைவது அறிவு

**விளக்கம் :**

உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் காணும் உலகத்தோடு இணைந்து செல்வது அறிவாகும்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை

அதிர வருவதோர் நோய்

**விளக்கம் :**

பின்பு வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளும் வல்லமை கொண்ட அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும் படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

**சிற்றினம் சேராமை**

மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி ;இனத்தான்ஆம்

இன்னான் எனப்படும் சொல்

**விளக்கம் :**

மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் ஏற்படும். இப்படிப்பட்டவர் என்று உலகத்தாரால் மதிக்கப்படும் சொல், சேர்ந்த இனத்தால் ஏற்படும்

நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை ;தீயினத்தின்

அல்லல் படுப்பதூஉம் இல்

**விளக்கம் :**

நல்ல இனத்தை விடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை; தீய இனத்தை விட துன்பத்தைத் தரும் பகையுமில்லை.

**வினைத்திட்பம்**

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்

மற்றைய எல்லாம் பிற

**விளக்கம் :**

நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும்; மற்றவையெல்லாம் பயன்படா .

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

**விளக்கம் :**

இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் யாவர்க்கும் எளியது .சொல்லிய படி செய்து முடித்தல் அரியது .

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

**விளக்கம் :**

எண்ணியவர் மன உறுதி உடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

**விளக்கம் :**

ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக் கூடாது. உருண்டு ஓடக்கூடிய பெரிய தேருக்கு அச்சாணி தான் இன்றியமையாதது ஆகும் .

**தூது**

கடன் அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை .

**விளக்கம் :**

தன் கடமை இது தான் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டு, அதைச் செய்வதற்கு ஏற்ற காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்து சொல்கின்றவரே சிறந்த தூதுவர் ஆவார் .

**மன்னரைச் சேர்ந்து ஒழுகல்**

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்

**விளக்கம் :**

குளிரிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள நினைப்பவர், தீயிட்டுக் குளிர் காய்வர். அப்போது ,மிகவும் விலகி விடாமலும், நெருங்கி விடாமலும் இருந்து குளிர் காய்வர். அதுபோல, அரசர்களை சார்ந்திருப்பவர் அரசரிடம் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும் .

பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல. செய்யும்
கெழுதகைமை கேடு தரும் .

**விளக்கம் :**

யாம் அரசர்க்குப் பழமையான நண்பராக உள்ளோம் எனக் கருதி, தகுதி அல்லாதவற்றைச் செய்தால் அந்த உரிமை தீமையையே தரும்.

**உட்பகை**

வாள்போல் பகைவரை அஞ்சற்க ;அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு

**விளக்கம் :**

வாளைப் போல வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு நாம் எப்போதும் அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் உறவு உடையவர் போல் நடித்து மனதின் உள்ளே பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்சவேண்டும் .

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன் உறைந் தற்று.

**விளக்கம் :**

உள்ளத்தால் ஒன்று படாதவருடன் சேர்ந்து வாழும் வாழ்க்கையானது, ஒரு குடிசையில் பாம்போடு சேர்ந்து வாழ்வது போன்றதாகும் .

**கள்உண்ணாமை**

துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

**விளக்கம்** :

உறங்கினவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்; அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குதலால் நஞ்சு உண்பவரே ஆவர்.

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

**விளக்கம்** :

கள் உண்டுவிட்டு மயங்கிக் கிடப்பவனிடம், நல்லனவற்றைச் சொல்லி ,அவனைத் திருத்த முயல்வது என்பது, நீருக்குள் முழுகிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு செல்வது போன்று பயனற்றதாகும் .

**சூது**

சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல்

**விளக்கம்**:

ஒருவருக்குத் துன்பம் பலவற்றையும் உண்டாக்கி, அவருடைய புகழையும் கெடுக்கின்ற சூதைப்போல, அவருக்கு வறுமை தருவது வேறொன்றும் இல்லை என்பதாகும்.

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

**விளக்கம்**:

சூதாடுமிடத்தில் ஒருவருடைய காலம் முழுவதும் கழியுமானால், அது அவருடைய பரம்பரைச் செல்வத்தையும், இயல்பான நற்பண்புகளையும் கெடுக்கும்.